# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2024.07.17 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# இலங்கை கிரிக்கெட் நடுவர்கள் சங்கம் (கூட்டிணைத்தல்)

**இலங்கை கிரிக்கெட் நடுவர்கள் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)*

கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இலங்கை கிரிக்கெட் நடுவர்கள் சங்கம்
## (கூட்டிணைத்தல்)

### இலங்கை கிரிக்கெட் நடுவர்கள் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை

“இலங்கை கிரிக்கெட் நடுவர்கள் சங்கம்” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னால் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட சங்கம் எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

***1***. இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின்        ஆம் இலக்க, இலங்கை கிரிக்கெட் நடுவர்கள் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

இலங்கை கிரிக்கெட் நடுவர்கள் சங்கதைக் கூட்டிணைத்தல்

***2***. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர், ‘‘சங்கம்’’ என குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை கிரிக்கெட் நடுவர்கள் சங்கத்தின் தற்போதைய உறுப் பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக, இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர், ‘‘கூட்டுத்தாபனம்’’ எனக் குறிப்பீடு செய்யப்படும்) “இலங்கை கிரிக்கெட் நடுவர்கள் சங்கம்” என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட

கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும்: அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத்தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்: அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனதாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது.-

(அ) கிரிக்கெட் நடுவர்கள் மற்றும் கிரிக்கெட் நடுவர்களாகத் தகுதிபெற விரும்பும் நபர்களின் நலன்கள், அந்தஸ்து, நலன், உரிமைகள் மற்றும் சலுகைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் ;

(ஆ) கிரிக்கெட் நடுவர்களாக தகுதி பெற விரும்பும் நபர்களின் சேர்க்கை மற்றும் தொழில்முறை பயிற்சியை ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் மற்றும் கிரிக்கெட் நடுவர்களைத் தரப்படுத்தல்

(இ) நடைமுறை பயிற்சி நெறிகளை நடாத்துவதன் மூலம் இலங்கையின் கிரிக்கெட் நடுவர்களின் உயர் தராதரங் களையும் மேம்படுத்தல்

(ஈ) நடுவர் தொழில் உயர் தரத்தையும் பேணுவதனை உறுதிப்படுத்துவதற்காக கிரிக்கெட் நடுவர்களாக தொழில்புரிவோரின் பொது நடத்தையையும் உயர் தொழில் செயற்பாடுகளையும் ஒழுங்குபடுத்தல்

(உ) விளையாட்டு அமைச்சுடனும் இலங்கையில் உள்ள கிரிக்கெட் உடனும் கூட்டுத்தாபனம் சார்ந்துள்ள அதனையொத்த அக்கறைகளையும் பணிகளையும் கொண்ட இலங்கைக்கு வெளியேயுள்ள ஒழுங்கமைப்பு களுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல்;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு உறுப்புரிமைத் தரங்களுக்கு சேர்த்துக்கொள்ளப்படுவோரின் தகைமையை மதிப்பீடு செய்தல் ; மற்றும்

(எ) தரவு வங்கிகளைத் தாபித்துப் பேணுதல் உட்பட கூட்டுத்தாபன உறுப்பினர்களின் நன்மைகளுக்கும் முன்னேற்றத்திற்கும் அவசியமான அத்தகைய வேறு வழிகளை எடுத்தல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்*

**4.** *(1)* இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக கூட்டுத்தாபன அலுவல்களின் நிர்வாகமும் முகாமையும் கட்டுப்பாடும் கூட்டுத்தாபன விதிகளுக்கமைவாக கூட்டுத்தாபன விதிகளுக்கிணங்க முகாமை செய்தல் தெரிவு செய்யப்படும் தலைவர், துணைத்தலைவர்கள், பொதுச் செயலாளர், பொருளாளர், போட்டி நியமனச் செயலாளர், உதவிச் செயலாளர், உதவிப் பொருளாளர், உதவிப் போட்டி நியமனச் செயலாளர், பொதுமக்கள் தொடர்பு அலுவலர், குழு உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட (இதனகத்துப்பின்னர் “குழு” எனக் குறிப் பிடப்படும்) நிறைவேற்றுக் குழுவொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

*(2)* இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கின்ற சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் முதலாவது குழுவின் உறுப்பினர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்*

**5.** *(1)* இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்;

(2) (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட பொதுத்தன்மை களுக்குப் பங்கமின்றி குழுவானது பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் நிறைவேற்றலாம் அத்துடன் புரியலாம்:-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக அசையும், அசையா சொத்துக்களை திரட்டுவதற்கும், காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளை பெறுவதற்கும்;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது தத்துவங்களை பிரயோகிப்பதற்கு அவசியமாகக் கூடியதான அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்தல் அல்லது உடன்படிக்கைகள் எல்லாவற்றையும் ஒன்றில் நேரடியாக அல்லது கூட்டுத்தாபனத்தினால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் மூலம் செய்துகொள்ளல் அத்துடன் புரிதல்;

(இ) வங்கிக் கணக்குகளைத் திறத்தல் தொழிற்படுத்தல் அத்துடன் மூடுதல் அத்துடன் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிணைப் பொறுப்புக்கள் அதன் பணங்களை முதலீடு செய்தல்;

(ஈ) குழு பொருத்தமானதென எண்ணும் அத்தகைய முறையிலும் அத்தகைய பிணைப்பொறுப்பின் மீதும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக பணத்தை முற்பணமாக கொடுத்தல் அல்லது கடனாக கொடுத்தல் அத்துடன் கடன்பெறல்;

(உ) கூட்டுத்தாபன உறுப்பாண்மை சேர்த்துக்கொள்ளல் உறுப்பாண்மையைப் புதுப்பித்துக்கொள்ளல் மற்றும் கூட்டுத்தாபனத்தால் நடாத்தப்படும் பாடநெறிகளுக்கான கட்டணங்களையும் ஒப்பபப்பணங்களையும் உதவித் தொகைகளையும் அறவிடல்;

(ஊ) கிரிக்கெட் நடுவர்களாக தகைமைபெற விரும்புவோரை சேர்த்துக்கொள்ளல் அவர்களின் பயிற்சி மற்றும் அவர்களை விலக்குதல் என்பன தொடர்பான நியதி நிபந்தனை விதித்துரைத்தல் அவற்றைக் கட்டுப்படுத்தலும் ஒழுங்குபடுத்தலும்;

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமிப்பதற்கும், தொழிலுக் கமர்த்துவதற்கும், இடமாற்றல் அவர்கள் மீது ஒழுக்காற்று கட்டுப்பாட்டை பிரயோகித்தல் அத்துடன் அவர்களின் சம்பளங்களையும் பணிக்கொடைகளையும் படிகளையும் கொடுத்தல்;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக தேவைப்படும் எதனையும் நிர்மாணித்தல் கொள்வனவு செய்தல் பேணுதல் மற்றும் பழுதுபார்த்தல்; அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் மேம்படுத்துவதற்கு அவசியமான அல்லது விரும்பக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகள் எல்லாவற்றையும் எடுத்தல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்

**6**. (1) காலத்துக்குக்காலம், கூட்டுத்தாபனம் ஏதேனும் பொதுக் கூட்டத்திலும் சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களினால் மூன்றில் இரண்டுக்கும் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் விடயங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றின் ஏதேனும் ஒன்றுக்காக இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(அ) குழுவின் பதவிதாங்குநரின் பதவிக் காலமும் பதவிதாங்குநர் அதற்குத் தெரிவுசெய்யப்படு

வதற்கான நியமிக்கப்படுவதற்கான அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கான தகைமையும் அது செய்யப்படும் விதம் பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அத்துடன் அமைய வெற்றிடங்களை நிரப்புதல் குழுவின் தத்துவங் களையும் பணிகளையும் கையளித்தல் அத்துடன் உப குழுக்களை நியமித்தல்;

(ஆ) குழுவின் பதவிதாங்குநர்களின் தத்துவங்களும் பணிகளும் கடமைகளும் அவர்களுக்கு கொடுபடற் பாலதான எவையேனும் படிகளும் அல்லது கட்டணங் களும்;

(இ) கூட்டுத்தாபன அலுவலர்களினதும் சேவையாளர் களினதும் நலனுக்காக சகாய நிதியத்தை தாபித் தலும் ஒழுங்குபடுத்தலும் கூட்டுத்தாபனத்தினாலும் அத்தகைய அலுவலர்களினாலும் சேவையாளர் களினாலும் அத்தகைய நிதியத்திற்கு செய்யப்பட வேண்டிய உதவு தொகையும்;

(ஈ) கூட்டுத்தாபன அலுவலர்களினதும் சேவையாளர் களினதும் முகவர்களினதும் உரிமைகளும் தத்துவங் களும் பணிகளும்;

(உ) குழுவின் கூட்டங்களையும், வருடாந்த பொதுக் கூட்டத்தையும் கூட்டுத்தாபன உறுப்பினர்களின் விசேட பொதுக்கூட்டங்களையும் கூட்டுதலும் நடாத்து தலும்;

(ஊ) கூட்டுத்தாபன ஆதனத்தை முகாமை செய்தலும் அதன் நிதிகளின் கட்டுக்காப்பும்;

(எ) உயர் தொழில் நடத்தைக் கோவை ஒன்றை உருவாக்குதல்; அத்துடன்

(எ) ஒழுக்காற்று விசாரணைக்கான நடவடிக்கைமுறை.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட விதி எதுவும், (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றென் றாற்போன்று, அதேபோன்ற கூட்டமொன்றில் அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலிருக்கும் சங்கத்தின் விதிகள் அவ்விதிகள் இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு முரணில்லாத வகையில் இருக்கும் வரை இப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபன விதிகள் எனக் கருதப்படுதல் வேண்டும்:

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை*

**7.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம். இலச்சினையானது குழுவின் அனுமதியுடன் தவிர குழு உறுப்பினர் இருவரின் முன்னிலையில் அன்றி எத்தன்மைத்தனமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது. இவ்வுறுப்பினர்களில் தாம் சமூகமாயிருந்தனர் என்பதற்குச் சான்றாக அச்சாதனத்தில் ஒப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு ஒப்பமிடுவதானது சாட்சியொருவராக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்*

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கொடை, விருப்பாவணம், நன்கொடை, அறுதி, சந்தாப்பணங்கள் அல்லது கட்டணங்கள் என்றவகையில் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் தீர்மானிக்கவேண்டியவாறான ஒரு வங்கியிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளிலோ கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களை மறுசீரமைப்பதற்கும் செய்வதற்கும் அல்லது சீராக்குவதற்குமாகக் கூட்டுத்தாபனம் ஏதேனும் தேய்மான நிதியத்தை, ஒதுக்கை அல்லது கடனாழ் நிதியத்தை உருவாக்கலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுகையில் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினை ஈடுசெய்வதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் ஆதனம் எந்த வகையிற் பெறப்பட்டாலும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், இலாபத்தின் பகுதியாகவோ மிகையூதியம் என்ற வகையாகவோ அல்லது வேறு எவ்வகையாகவோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப்படுதலும் அல்லது கைமாற்றப்படுதலும் ஆகாது.

கணக்குகளும் கணக்காய்வும்

**9.** (1) பொருளாளர் குழுவினது மேற்பார்வையின் கீழ் கூட்டுத்தாபனத்தின் வரவு மற்றும் செலவு பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஆகக் குறைந்தது ஒவ்வோர் ஆண்டும் பரிசீலிக்கப்பட்டு கணக்காய்வு செய்யப்பட வேண்டும். அத்துடன் வரவு செலவுக் கணக்கின் செம்மையும் ஐந்தொகையும் குழுவினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர்களால் சான்றளிக்கப்படல் வேண்டும்.

சங்கத்தினால் செலுத்தப்படற்பாலனவும் மன்றத்திற்கு செலுத்தப்படவுள்ளதுமான கடன்கள்

**10.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்திகதியன்று சங்கத்துக்கு வருமதியாகவுள்ள கடன்கள், உதவுதொகைகள், ஒப்பப்பணங்கள் ஆகியன இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனம்*

**11**. அது வருடாந்த பொதுக் கூட்டத்திலும் அல்லது விசேட பொதுக்கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர் களின் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டு கூட்டுத்தாபனத்தைக் கலைப்பதற்கு வாக்களிக்கலாம். அவ்வாறு உறுப்பினர்களின் ஆதரவை அல்லது விருப்பத்தைப் பெற்று கூட்டுத்தாபனத்தை கலைத்தால் கூட்டுத்தாபனத்தின் ஆதனம் எதுவும் எஞ்சியிருக்குமானால் அத்தகைய ஆதனம் மற்றும் அனைத்துக் கடன்கள் மற்றும் பொறுப்புக்கள் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கலாகாது. இலங்கை கிரிக்கெட் மற்றும் விளையாட்டு அமைச்சு அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களுக்கிடையே வருமானம் அல்லது சொத்தை பங்கிடுவது தடைசெய்யப்பட் டுள்ளது. சங்கம் அல்லது கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டால் இக்கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைக் கொண்டுள்ள இலங்கை கிரிக்கெட் அல்லது விளையாட்டு அமைச்சுக்கு அதன் ஆதனம் மற்றும் பொறுப்புக்கள் கொடுக்கப்பட வேண்டும் மற்றும் கைமாற்றப்பட வேண்டும். அவ்வாதனம் மற்றும் பொறுப்புக்கள் எவ்வமைப்புக்கு அதாவது விளையாட்டு அமைச்சுக்கா அல்லது இலங்கை கிரிக்கெட்டிற்கா என கலைக்கப்படும் நேரத்தில் அதன் பின்னர் சென்றடையும் என்பதை தீர்மானிப்பது அச்சங்கத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் மாத்திரம் தீர்மானிக்கப்பட வேண்டும்.

*குடியரசின் ஏனையோரின தும் உரிமை களைப் பேணுதல்*

**12**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமை களையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமை கோருகின்ற வர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளை யேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**13**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.